DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No. 397/2022 P.W. 1 சுதந்திரதாசன் த/பெ. வேதையன்**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை ஏற்கெனவே நிரூபண ஆணையுறுதி ஆவணம் மூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக பின்வருவனவற்றை குறியீடு செய்கிறேன்.

| வ. எண். | ஆவணங்கள் விவரம் | குறியீடு செய்யப்பட்ட விவரம் | ஆட்சேபனை |
|---|---|---|---|
| 1 | 18.12.2020 ஆம் தேதியிட்ட நவீன்குமார் எனக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு - அசல் | ம.சா.ஆ.5 | N.A |

எனது புகார் படி உத்தரவாக மன்றத்தை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கடனுறுதி சீட்டை நான் எங்கு வைத்து எழுதிவாங்கினேன் என்றால் எனது வீட்டில் வைத்து எழுதி வாங்கினேன். கடனுறுதி சீட்டில் எதிரி என்னிடம் 18.12.2020 ம் தேதியன்று ரூ.37,00,000/- தொகை வாங்கியதாகவும் அதற்கு 100 க்கு ரூ.1/- வீதம் வட்டி முதலும் சேர்த்து தரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ள சிற்றரசு, அறிவழகன் ஆகியோர்கள் எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். கடைசியாக கையெழுத்து போட்டுள்ள மாரியப்பன் என்பவர் எனது ஊர்க்காரர் தான். அவர் பத்திர எழுத்தராக உள்ளார்.

அவர்கள் யாரையும் நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரிலும், நிரூபண ஆணையுறுதி ஆவணத்திலும் 18.12.2020 ம் தேதியன்று எதிரி என்னிடம் ரூ.20,00,000/- கைமாற்று கடனாக பெற்றுள்ளார் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வட்டிக்கு தான் கொடுத்தேன். நான் ஏற்கெனவே வங்கி மூலம் கொடுத்த ரூ.17,00,000/- கடனையும் சேர்த்து மொத்தம் ரூ.37,00,000/-த்தை வட்டிக்கு தான் கொடுத்தேன்.

எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.7,00,000/- தொகையை எப்போது கொடுத்தார் என்றால் 1 வருடம் கழித்து கொடுத்தார். ரூ.37,00,000/- வட்டிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அதில் ரூ.7,00,000/- பெற்றுக்கொண்டேன் என்றும், ரூ.30,00,000/- தொகை எனக்கு வரவேண்டும் என்று என்னுடைய வழக்கு ஆவணங்களில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் நான் எதிரிக்கு ரூ.37,00,000/- தொகை வட்டிக்கு கொடுத்திருந்தால் வட்டியையும் சேர்த்து தான் காசோலை வாங்கியிருப்பேன் என்றும், எதிரிக்கு ரூ.37,00,000/- தொகை கொடுக்காததால் தான் நான் வட்டியை கணக்கு பார்த்து வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு ஆவணங்களில் எதிரி என்னிடம் 6 மாதத்தில் வாங்கிய கடனை திருப்பி தருவதாக கடனுறுதி சீட்டில் எழுதி கொடுத்து கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் எதாவது காலக்கெடு நிர்ணயம் செய்து அந்த காலக்கெடுவிற்குள் எதிரி என்னிடம் வாங்கிய தொகையை திருப்பி தரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வங்கி பரிவர்த்தனை மூலமாக நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.17,00,000/- தொகைக்கான ஆவணங்களையோ, எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.7,00,000/- தொகைக்கான ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தேவைபட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டானது இந்த வழக்கு தொகைக்காக எதிரியால் கொடுக்கப்படவில்லை என்றும், ஏற்கெனவே அவர் வாங்கிய கடன் தொகைக்காக அவரால் கையொப்பம் மட்டும் இடப்பட்டு என்னிடம் கொடுக்கப்பட்ட கடனுறுதி சீட்டை நானே தற்சமயம் பூர்த்தி செய்து அதில் நான் எனது ஊர்க்காரர்களை சாட்சியாக சேர்த்து அந்த கடனுறுதி சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கும், எதிரிக்கும் ஏற்கெனவே இருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் நான் எதுவும் பேசவில்லை. Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.